02
2
11 APR 1932

Reg. No. M. 1534.

R. C. Training
School Magazine,
Trichinopoly.

திருச்சினுப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

போதனு விஷயப் பூங்கொத்து

மாதமோருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

கொத்து 22	மார்ச்சு 1932	மலர் 9

SL
ππ211, N11PP.
N32.22.9
182289

...ிராதிபர் குறிப்புகள்

...த்து

...ளில் நட...ிள்ளவேண்டிய தேகாப்பியாசப் ...பவும் ...ய ...ார் கட்டளையொன்று பிறந் ...யாசம் என்...யமென்பதைப்பற்றிச் சந்தே

கிப்பார் ஒருவருமில்லை. ஆனால் தேகத்தையொட்டிய சகல காரியங்களையும் பாடசாலைகளே கவனிக்கவேண்டுமாவென்பதைப்பற்றி சிலர் சந்தேகிக்கிறார்கள்; அநேகர் மறுக்கிறார்கள். எப்படியும், தேகாப்பியாசத்துக்காக உபகரணங்களும் வெளியிடங்களும் தேவை; இவைகளைச் சம்பாதிக்கச் சர்க்கார் உதவிசெய்ய முன்வரமாட்டார்கள். புத்தி புகட்டுவது சர்க்காரின் முக்கிய கடமையில்லை; உதவி செய்வதே முக்கிய கடமை.

* * *

ஆரம்பப் பாடசாலைகளுக்குச் சர்க்கார் செய்யும் சாதாரண உதவிமுதலாய் இவ்வருடம் வெகுவாய்க் குறைந்துபோனது விசனிக்கத்தக்கதே. பாடசாலைகளை நடத்துபவர்களின் ஊக்கத்துக்கும் திறமைக்கும் தக்கது அதிக உதவி செய்வதை யொழித்து உபாத்திமார்களின் தொகைக்கும் சர்ட்டிபிக்கேட்டுக்கும் தக்கது செய்யும் சாதாரண உதவிமுதலாய்ச் செய்ய சர்க்கார் ஜில்லாக் கவுன்சில்களுக்குக் கொடுக்கும் பணம் போதாதென்கிறார்கள். இதுதானோ ஆரம்பப்படிப்பை விர்த்திசெய்வதற்கு வழி?

* * *

அடுத்த வருஷம் லோவர் கிரேடு பயிலுவதற்கு மாணவர் சேர்க்கப்படுவார்களோவென்பது சந்தேகம். சேர்க்கப்படுவதாயிருந்தால் 5-வது வகுப்பு சர்ட்டிபிக்கேட் பெற்ற ஒடுக்கப்பட்ட ஜாதியாரே சேர்க்கப்படுவார்கள். ஏனையோர் ஸ்டைபெண்டு இல்லாமலும் சேர்க்கப்படமாட்டார்கள். லோவர் கிரேடுக்கு மாத்திரமல்ல, மற்ற கிரேடுகளுக்கும் ஸ்டைபெண்டு விஷயத்தைப் பற்றி இன்னும் ஒரு முடிவுமில்லை.

182289

மதிப்புரை

ஹையர் எலிமெண் [illegible] செகண்டரி கிரேட் போதனுமுறை ஆசிரிய மாணக்கர்களுக்கு [illegible] யோகப்படும்படி ஸ்ரீமான் எஸ். அருளானந்தம்பிள்ளை, பி.ஏ., [illegible] டி. அவர்கள் "இந்திய சரித்திர பாடக்குறிப்புகள்" என்ற [illegible] நூலை இயற்றியுள்ளார். தற்

போது அதன் முதற்பாகம் வெளியாகி இருக்கிறது. இப்புத்தகத்தின் பிரதியொன்று நமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

இந்நூலாசிரியர் போதனுமுறைப் பாடசாலை அனுபவம் நிரம்பவும் வாய்ந்தவர். தமது நீண்ட அனுபவத்தையும், கல்வித் திறமையையுங்கொண்டு, சரித்திர பாடம் போதிக்கவேண்டிய முறையை மிகத் தெளிவாயும் அழுத்தமாயும் காட்டியுள்ளார். சரித்திர பாடக்குறிப்புகள் அப்பாட போதகத்திற்கு எவ்வளவு இன்றியமையாதென்பதைத் தெரிந்துகொள்ளவேண்டுமாயின், போதகாசிரியர் ஒவ்வொருவருடைய கையிலும் ஒரு பிரதி இருத்தல் அவசியமாகும். இது சாத்தியமாகும்படி இதன் விலை 12 அணுவிலிருந்து 10 அணுவுக்கு குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஆசிரியர்களனைவரும் இதன் பயனை அடையுமாறு இப்புத்தகத்தை வாங்கி உபயோகிப்பார்களாக.

இதன் நூலாசிரியருக்கு எமது நன்றியறிதலைச் செலுத்துவதுடன் தமது முயற்சியை இன்னும் அதிகப்படுத்தி இதன் இரண்டாவது பாகத்தையும் ஆசிரியர்களுக்கு உதவும்படி செய்யக் கோருகிறோம்.

வீட்டு அப்பியாசம்

ஆரம்பப் பாடசாலை முதல் நடுத்தர உயர்தரப் பாடசாலைகள் வரையில் படிக்கும் மாணுக்கர்களுக்கு உபாத்தியாயர்களாகிய நாம் வீட்டு அப்பியாசங்கள் கொடுப்பதென்பது தொன்றுதொட்டு ஏற்பட்டுள்ள ஒரு வழக்கமாயிருந்து வருகிறது. பிள்ளைகள் வீட்டில் செய்யும் துஷ்டத்தனத்தைப் பொறுக்கமுடியாமல் சில பெற்றோர்கள் நம்மிடம் வந்து, அவர்கட்கு ஏற்ற வீட்டுவேலைகள் கொடுக்கும்படி முறையிடுவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். ஆதலால் அப்பெற்றோர்களைத் திருப்தி செய்ய பிள்ளைகளுக்கு அளவுக்கு மிஞ்சி நாம் வேலை கொடுத்துவருகிறோம். அவ்வீட்டு வேலைகளைக் கொடுக்கும்பொழுது பிள்ளைகளின் வயதையும், வகுப்பையும் கவனியாமல், நம்முடைய பளுவை எப்படியாயினுங் கழித்துவிடவேண்டும் என்ற எண்ணத்துடன் அப்பியாசங்கள்

கொடுப்பதும் உண்டு. ஆதலால் பிள்ளைகளுக்கு வீட்டு அப்பியாசங்கள் கொடுப்பதில் சில குறிப்பான வழிகளைப் பின்பற்றினல் உண்மையில் பிள்ளைகள் அவற்ருல் பலனடைவார்கள்.

'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டில்' என்ற பழமொழிப்படி 8 வயதுக்குட்பட்ட கிண்டர் கார்டன் வகுப்புக் குழந்தைகள் எப்பாடங்களையும் பள்ளிக்கூடத்திலேயே உபாத்தியாயருடைய நேர்ப்பார்வையில் கற்பிக்கப்படாமல் வீட்டில் படிக்கச்செய்தால் தப்பான வழியில் அவர்களுடைய இயற்கை அபிப்பிராயங்கள் மாற இடமுண்டாகும். குழந்தைகள் வீட்டில் பெற்ருேர்களின் பார்வையில் வீட்டுவேலையைச் செய்யலாம் என்று சிலர் வாதிக்கக் கூடும். ஆனல் பெற்ருேர்கள் தங்கள் வேலையைப் பகல் முழுவதும் செய்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினதும் குழந்தைகளின் வீட்டுவேலையைக் கவனிக்க அவர்களுக்கு உற்சாகமும் உண்டாவதில்லை, நேரமும் இருப்பதில்லை. குழந்தைகளுக்கு வீட்டுவேலையைக் கொடுப்பதால் அவர்களுக்கு இயற்கையாயுள்ள விளையாடும் தன்மை குறைவதோடு, தங்கள் வேலையைச் செய்யச் சக்தியற்றவர்களாய்ப் பல விதத்திலும் வருந்துகிருர்கள். ஆதலால் குழந்தைகளுக்கு வீட்டுவேலை கொடுப்பதென்பது நியாயமாகாது.

வீட்டுவேலை கொடுக்குந் தன்மை:—பிள்ளைகளுக்கு வீட்டுவேலை கொடுக்கவேண்டியது அவசியந்தான். ஆனல் அவ்வாறு கொடுப்பதில் சில முக்கிய அம்சங்களைக் கவனித்து நாம் கொடுக்கவேண்டும். முதலாவதாக, அவசரமாகவும் அலங்கோலமாகவும் வீட்டு அப்பியாசங்களைக் கொடுக்காமல் நிதானமாக பிள்ளைகளுக்கு என்னென்ன வேலைகள் என்று அவர்கள் நன்ருய்த் தெரிந்துகொள்ளும்படி வாயால் சொல்லுவதைவிட கரும்பலகையில் எழுதிக் காட்டவேண்டும். பிறகு கொடுக்கப்படும் ஒவ்வொரு பாடத்தையும் எவ்வாறு செய்வது என்பதைத் தெளிவாக அந்தந்தப் பாடத்துக்குத் தக்கவாறு ஒரு மாதிரி செய்துகாட்டி விளக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் அவ்வேலைகளில் பிள்ளைகளுக்குள்ள கஷ்டங்கள் நீங்கி உற்சாகமாகவும், ஊக்கமாகவும் செய்ய நேரிடும். மேலும் பையன்கள் அவ்வேலைகளைப்பற்றி பெற்ருேர்களைத் தொந்தரவு செய்யாமல் தாங்களே செய்வார்கள்.

வீட்டப்பியாசத்தின் தன்மை:—நாம் கொடுக்கும் வீட்டு வேலையானது பிள்ளைகளுக்கு அருவருப்பு ஏற்படாதபடி அவர்களது வயதுக்கும் வகுப்புக்கும் ஏற்றபடி இருக்கவேண்டும். அனுவசியமான அப்பியாசங்களைப் பிள்ளைகளின்மேல் சுமத்துவதைவிட சொற்பவேலையைக் கொடுத்து அவ்வேலையைச் சரியானபடி செய்துவரும்படி செய்வதே உத்தமமாகும். நாம் கொடுக்கும் அப்பியாசங்கள் பிள்ளைகளின் சீர முயற்சியைக் காட்டக்கூடியதான காப்பி எழுதல், பார்த்தெழுதல் முதலானவை மாத்திரமல்லாமல், மூளை அபிவிருத்திக்குரியதும், உற்சாகம் உண்டாக்கக்கூடியதுமான அப்பியாசங்களைத் தருதல்வேண்டும். உதாரணமாக, பாராமல் படித்தல், கணக்கு சம்பந்தமான விதிகள், படம் வரைதல் முதலியன. மேலும் இயற்கை சாஸ்திர சம்பந்தமான பாடங்கள் பிள்ளைகளின் மனதைக் கவரக்கூடியதாகையால் அவ்வித விஷயங்களை அவர்களே நேரில் கவனித்து கண்ட விஷயங்களை எழுதி வரும்படி செய்யலாம்.

அப்பியாசத்தின் அளவு:—பிள்ளைகளில் அநேகர் வீட்டு அப்பியாசங்கள் செய்ய நேரமில்லை என்று நம்மிடம் வந்து முறையிடுவதும் நமக்குத் தெரிந்த விஷயந்தான். ஆதலால் நாம் கூடுமானவரையில் பிள்ளைகளுக்குள்ள வீட்டு நேரத்தில் எவ்வளவு காலத்தை நாம் பள்ளிக்கூடப் பாடங்களுக்காக உபயோகிக்கலாம் என்று தீர யோசித்து அதற்கு ஏற்றவாறு பாடங்களை அமைத்துக் கொடுக்கவேண்டும். தற்காலத்தில் அநேகமாக ஒவ்வொரு வகுப்புக்கும் ஒவ்வொரு தனி உபாத்தியாயர் இருப்பதில்லை. விசேஷமாக நடுத்தர உயர்தரப் பள்ளிக்கூடங்களில் பாடவாரியாக ஒரு வகுப்புக்கு பல உபாத்தியாயர்கள் கற்பிக்கிறார்கள். ஒவ்வொருவரும் அவரவர் பாடத்துக்குரிய வீட்டு அப்பியாசத்தைக் கொடுத்துவருகிறார்கள். இவ்வாறாக பல உபாத்தியாயர்களால் கொடுக்கப்பட்ட வீட்டு அப்பியாசஙகளைச் செய்ய நேரமில்லாமல் உண்மையில் பிள்ளைகள் வருந்துகிறார்கள். இப்படிப்பட்ட சமயங்களில் ஒரு வகுப்புக்குள்ள பல உபாத்தியாயர்களும் ஒன்றுகூடிப் பேசி எவ்வாறு வீட்டுவேலையைக் கொடுக்கவேண்டுமென்பதை ஒவ்வொரு வாரத்தின் முதல்நாளே தீர்மானம் செய்துகொண்டு

அதற்கேற்றபடி பாடங்களை மாற்றி மாற்றிக் கொடுப்பதே தகுதியாகும்.

வீட்டு அப்பியாசங்களில் அசட்டையும், அதின் நிவர்த்தியும்: பிள்ளைகள் வீட்டு வேலையைச் செய்யாமலிருப்பதற்கு முதற் காரணம் அந்த வேலையை எப்படிச் செய்வது என்ற அறிவின்மையே. இக்குறையை நாம் வீட்டப்பியாசங்களைக் கொடுக்கும்பொழுதே தெளிவாக விவரித்துவிடுவதால் நீக்கிவிடலாம். சில சமயம் பிள்ளைகளுடைய சோம்பேறித்தனமும் அலட்சியமும் அவர்களுக்குப் பெற்றோர்களால் கொடுக்கப்படும் வீட்டு வேலைகளுமேயாகும். இவற்றை நிவர்த்திக்க நாம் கூடுமானவரையில் பெற்றோர்களைக்கண்டு பேசவேண்டும். நமக்கும் பெற்றோர்களுக்கும் ஒத்துழைப்பு இருந்தால் நாம் அநேக காரியங்களை சாதித்துவிடலாம். பெற்றோர்களை பிள்ளைகள் செய்யும் வீட்டு அப்பியாசங்களைக் கொஞ்சம் கவனிக்கும்படி தூண்டவேண்டும். சில பிள்ளைகள் வீட்டு அப்பியாசங்களைச் செய்ய மறந்துவிட்டதாகவும் கொடுத்த வேலையைத் தவறுதலாக அபிப்பிராயப்பட்டுவிட்டதாகவும் காரணம் கூறலாம். இச்சமயங்களில் நாம் அப்பையன்களை அதே வேலையை மறுபடி செய்யும்படி வற்புறுத்துவதால் உபாத்தியாயரை ஏமாற்றமுடியாதென்ற எண்ணத்தைக்கொண்டு ஒழுங்காகச் செய்யத்துவக்குவார்கள்.

பிள்ளைகள் வீட்டப்பியாசங்கள் செய்வதில் அலட்சியமாயிருப்பதற்கு வேறொரு காரணமும் உண்டு. அதாவது நாம் சில சமயங்களில் பிள்ளைகளின் வீட்டப்பியாசங்களைக் கவனிக்க நேரமில்லாமல் விட்டுவிடுவதேயாகும். ஆதலால் உபாத்தியாயர் வீட்டப்பியாசங்களைக் கவனிப்பதில்லை என்று பிள்ளைகள் அறியாதபடி நாம் நம்முடைய நேரத்துக்குத்தக்காப்போல் அவ்வப்பியாசங்களைக் கவனித்து வரவேண்டும்.

S. P. Subrahmanyan,
Assistant,
R. C. Bg. & Training School,
Trichinopoly.

புத்தகசாலை இயக்கமும் தேச முன்னேற்றமும்

கிராம புனரோத்தாரணம், கிராம முன்னேற்றம் தேச முன்னேற்றம், என்ற மொழிகள் இக்காலத்தில் பொதுக் கூட்டம், சங்கம், மகா நாடு இவை நடைபெறும்போது உபந்நியாசகர்கள், பிரசங்கிகள் முதலியோரால் அடிக்கடி பிரயோகிக்கப்பட்டுவருகின்றன. அன்னோரால் வழங்கப்படும் மற்றொரு செல்வாக்கு பெற்ற மொழி நாகரீகம் என்பதாம். ஆனால் அம்மொழிகளின் கருத்தும், அக்கருத்து நிறைவேற என்னென்ன முறைகள், உபாயங்கள் கையாடப்படவேண்டும் என்பதும் அனைவருடைய ஆராய்ச்சிக்கும், செயலுக்கும் உரியனவாய் இருத்தல் வேண்டும்.

எந்தத் தேசமாயினும், அதன் அரசியல் பொது மக்களின் அபிப்பிராயங்களைத் தழுவியும், அவர்களது நன்மையைக் கருதியும், அவர்களது சுக வாழ்விற்குதவியாயும் அமைந்திருக்குமானால் அத்தேசம் முன்னேற்றம் அடைந்துள்ளது என்பர். ஜன நாயக ஆட்சி முறையில், ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அதாவது பிரதிநிதிகளான ஒரு சிலர் பொது மக்களின் நன்மைக்காக உழைப்பவர்களாகின்றார்கள். இத்தகையோர் சுயநலங் கருதாமல் சமூக சேவை புரிவதில் ஆர்வமுற்றவர்களாய் இருத்தல் அவசியம்பற்றி, பொது ஜனங்கள், விசேஷமாய் வாக்குரிமை பெற்ற, வாக்காளர்கள் (வோட்டர்கள்) அனைவரும் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்துகொள்ளுவதில் வெகு ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். போதுமான கல்வியறிவும், உலக அனுபவமும், இதற்கு இன்றியமையாதன. வாக்காளர்களுக்குத் தங்களது கடமைகளும் சுதந்திரங்களும் நன்கு விளங்கவேண்டும். எவ்வாறு, எதன் மூலம் விளங்குவது ?

கல்வியின் நோக்கமும் பயனும் என்ன? விரிந்த நோக்கமும், பரந்த சிந்தனையும், கண்ணியமான எண்ணமும், ஒரு வார்த்தையில் நல்ல மனதும் எல்லா சமூக வாழ்விற்கும் தேச முன்னேற்றத்திற்கும் அடிப்படை. சுயநலப் பரித்தியாகமும், பரோபகாரமும், பெருந்தன்மையும், விரிந்த நோக்கங்களாம். இவையனைத்தும் நல்ல மனதில் உதிப்பவை. இவ்வித மனோ

பாவங்களை (மன விசாலிப்பை) வளர்க்கக் கல்வியானது ஏற்ற சாதனம். எனவே, அதற்காக எவ்வளவு முயற்சியும், எவ்விதப் பணச் செலவும் ஒருக்காலும் மிகையாகா.

ஆனால் இக்கல்வியானது ஆரம்பப் பாடசாலைகளில் தோன்றி அத்துடன் முடிந்துவிடக்கூடாது. வறுமை ஒரு முக்கியமான இடையூறுதான். தொடர்ந்துவரும் மேல் படிப்புக்கு வறுமை முட்டுக்கட்டை போடுவது உண்மையாயினும், பள்ளிக்கூட மேல் படிப்புக்குச் சமமான மற்றொருவித படிப்பும் உளது. அதுதான் புத்தகசாலைப் படிப்பு அல்லது வாசகசாலைப் படிப்பு என்பது. இப்படிப்பின் இயல்பு, தன்மை உபயோகம் முதலியவற்றை இனி விவரிப்போம்.

(தொடரும்)

T. S. Ganapathi Aiyar.

சந்தாதார் பக்கம்

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தின் இடது பக்கம் கொஞ்சம் இடம்விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர்.]

நன்றி மறவேல்

நன்றியென்பது ஒருவர் நமக்குச் செய்யும் உபகாரத்திற்கு நாம் செய்யும் பதில உபகாரம் அல்லது உதவி எனப் பொருள்படும். பொதுவாக, உதவி செய்வதின் நோக்கம் யாதெனில், நன்றி செய்தவர் நன்மையடைகுவர் என்பதேயாம். ஆகையினால் ஔவைபிராட்டியார் 'நன்றி மறவேல்' என்று சொல்லுகிறார். அதன் அர்த்தம் என்னவெனில், ஒருவர் செய்த உதவியை நாம் மறக்கவொண்ணாது.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று

என்பது ஓர் மூதுரை.

மேலும், "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்று அறிஞர் சொல்லுகின்றனர். இவ்வாறிருக்குங்கால்,

நன்றி யொருவருக்குச் செய்தக்கால்—அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளராவளர் தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருதலால்,

56
mall, N11PP
N32.22.9

என்றபடி, யாதாமொருவன் தனது அயலானிடமிருந்து எவ்வகையாயினும் உதவி பெற்றால், தென்னை மரமானது எவ்வாறு தன் அடிப்புறத்து உண்ட நீரை, தலையினாலே இளநீராகக் கொடுக்கின்றதோ அவ்வாறே அவனும் செய் நன்றி மறவாது, பதில் உதவி செய்யாமலிருப்பது எங்ஙனம்? ஆயினும், சிலர் "காரியம் முடியுமட்டும் கழுதையையும் காலைப் பிடி" என்பதற்கிணங்க, உதவி பெறுமட்டும், வெகு சிநேகமாயிருந்து, பின்னர் அவர்களை முற்றிலும் மறந்துவிடுகின்றனர். இது மானிடராய்ப் பிறந்த நமக்கு அழகல்ல. ஏனெனில் மிருகங்கள் முதலாய்த் தங்களைப் போஷித்து, வளர்த்துவரும் எஜமானர்களைக் கண்டதும், வாலை ஆட்டி, தங்களது நன்றியைத் தெரிவிக்கின்றன. மிருகேந்திரனாகிய சிங்கம், வெகு கொடியதாயிருந்தபோதிலும் தனக்கு உதவி செய்த அண்ட்ரோக்கிளீஸ் என்பவனுக்கு எவ்வாறு தனது நன்றியைக் காட்டிற்று, என்பதை நாம் எல்லோரும் புஸ்தகங்களிலிருந்து அறிந்திருக்கிறோம்.

இதுநிற்க, நன்றிசெய்வது என்றாலும், பிறர்சிநேகக் கிரிகை செய்வது என்றாலும் ஒன்றுதான். பிறர்சிநேகம், தேவசிநேகத்துக் கடுத்தது என்று மூத்தோர் சொல்லுகின்றனர். மலையின்றி, நதி உண்டாகாததுபோல், தேவசிநேகமின்றி பிறர்சிநேகம் உண்டாகாது. வேதகலகம் நடக்குங்காலத்தில், வேதசாக்ஷிகள் தங்களைத் துன்புறுத்திக் கொலைசெய்தவர்களைப் பகைக்காது, அவர்கள் சத்தியமறையைக் கடைப்பிடித்து, சன்மார்க்கத்தில் ஒழுக கட

182289

வுளைப்பார்த்து வேண்டிக்கொண்டார்கள் என்பது நம் யாவருக்கும் தெரிந்த விஷயம். இதிலிருந்து நாம் அறிவது பிறர்சிநேகமும், தேவசிநேகமும் ஒன்ருேடொன்று இணைபிரியாதிருப்பதாம். ஆகையால் நன்றியை ஒருபோதும் மறக்கக்கூடாது.

கடைசியில் நன்றிசெய்பவர் இவ்வுலகில் நன்மையடையாவிட்டாலும், மறுமையில் அதற்குத் தகுந்த சம்பாவனை பெறுவார்கள். ஆகையினுல் நாம், இம்மையில் ஒருவர்க்கொருவர் உதவி செய்வதுமன்றி, செய்நன்றியை அனுசரித்து பதில் உதவி செய்து வாழ்வோமாக.

A. S. Arulapan,
Secondary grade,
R. C. Boarding & Training School.

பாடக் குறிப்பு

வதுப்பு: III. நேரம்: 35 நிமி. பாடம்: கணக்கு.

உபாத்தியாயர் பெயர்: A. Ignatius Edmund

பாகம்: பெருக்கல்.

நோக்கம்: இரண்டு ஸ்தான எண்ணை 7-ஆல் பெருக்கக் கற்பித்தல்.

பீடிகை:—ஒரு குவியலில் 7 வீதம் 8 குவியல்களில் எத்தனை வேஷ்டிகளிருக்கும்? ஒரு பையனுக்கு 6 மிட்டாய்கள் வீதம் 9 பேருக்குக் கொடுக்க எத்தனை மிட்டாய்கள் வேண்டும்? இவ்வாறு பல கணக்குகள் போட்டபின் பாடத்தைத் துவக்க வேண்டும்.

விஷயம்:—ஒரு பசு 42 ரூபாய்கள் வீதம் 7 பசுக்களின் விலை யென்ன?

நூ.	ப.	ஒ.
	4	2
	4	2
	4	2
	4	2
	4	2
	4	2
	4	2
2	9	4

முறை:—பிள்ளைகளை உற்சாகப்படுத்தியபின் ஒரு பையனிடம் இக்கணக்கை எவ்விதம் செய்வது என்று கேட்டு 42-ஐ 7 மடங்கு அதிகமாக்கவேண்டுமென்னும் பதிலை வரவழைத்துக்கொள்ளவேண்டும். 42-ஐ 7 மடங்கு அதிகமாக்குவதற்காக 42-ஐ 7 தடவை ஒன்றின்கீழ் ஒன்றாக எழுதிக் கூட்டச் செய்யவேண்டும். 7 தடவை 2 ஒன்றுகள் சேர்ந்தது 14 என்று சொல்லி 4 ஒன்றுகளை ஒன்றாம் ஸ்தானத்தில் போடச்செய்துவிட்டு, மீதி 1 பத்தையும் 7 தடவை 4 பத்துகளாக வரும் 28 பத்துகளுடன் சேர்த்து 29 பத்துக்களென்று பத்தாம் ஸ்தானத்தில் போடச் செய்யவேண்டும்.

	4	2
		7
	1	4
2	8	
2	9	4

பின் 42-ஐ 7-ஆல் பெருக்க ஆரம்பிக்கவேண்டும். 7-ஆல் முதலில் 2 ஒன்றுகளைப் பெருக்கி, வரும் 4 ஒன்றுகளை ஒன்றாம் ஸ்தானத்திற்கு நேராகவும், 1 பத்தை 10-ம் ஸ்தானத்திற்கு நேராகவும் போட்டுவிட்டு, 1 பசு 2 ரூபாய் வீதம் 7 பசுக்கள் வாங்கிய விலை 14 ரூபாயென்று கற்பிக்கவேண்டும்.

அதன்பின் 4 பத்துகளை 7-ஆல் பெருக்கி, வரும் 28 பத்துகளையும் 14 ஒன்றுகளுக்குக் கீழே பத்தாம் ஸ்தானத்தில் போட்டுவிட்டு பிறகு 1 பசு 40 ரூபாய்கள் வீதம் 7 பசுக்களின் வாங்கிய விலை 280 ரூபாயென்று எடுத்துரைத்தபின் 14 ரூபாயையும் 280 ரூபாயோடு சேர்க்கச் செய்து 294 ரூபாய்களென்று கற்பிக்கவேண்டும்.

	4	2
		7
2	8	
	1	4
2	9	4

பிற்பாடு 42-ஐ 7-ஆல் பெருக்கும்பொழுது முதலில் 4 பத்துக்களை 7-ஆல் பெருக்கி வந்த 28 பத்துக்களை 10-ம் ஸ்தானத்தில் போட்டுவிட்டு முதலில் ஒரு பசு 40 ரூபாய்கள் வீதம் 7 பசுக்களின் விலை 280 ரூபாயென்று கற்பிக்கவேண்டும். அதன்பின் 2 ஒன்றுகளை 7-ஆல் பெருக்கி வந்த 14-ஐ 28 பத்துக்களுக்குக் கீழே 4 ஒன்றுகளை ஒன்றாம் ஸ்தானத்திலும்,

1-ஐ பத்தாம் ஸ்தானத்திலும் போட்டுவிட்டு பின் ஒரு பசுவின் விலை 2 ரூபாய் வீதம் 7 பசுக்களின் விலை 14 ரூபாயென்று எடுத்துக் காண்பிக்கவேண்டும். பின் 280 ரூபாயுடன் 14 ரூபாயைச் சேர்த்தால் 294 ரூபாயென்று பிள்ளைகளிடமிருந்தே வரவழைக்கவேண்டும்.

```
 4 2
   7
-----
2 9 4
-----
```

அதன்பின் 42-ஐ 7-ஆல் பெருக்கி 7 தடவை 2 ஒன்றுகள் 14 என்று 4-ஐ ஒன்றும் ஸ்தானத்திலும், மீதி 1 பத்தை, 4 பத்துக்களை 7-ஆல் பெருக்கி வந்த 28 பத்துக்களுடன் சேர்த்து 29 பத்துக்களென்று பத்தாம் ஸ்தானத்தில் போடவேண்டுமெனக் கற்பிக்கவேண்டும். இப்பொழுது 7 பசுக்களின் விலை என்னவெனக் கேட்டு 294 ரூபாய்களென்ற பதிலை பிள்ளைகளிடமிருந்து வரவழைக்கவேண்டும்.

க. ப. சு.

கூட்டலின் சுருக்கமே பெருக்கலாகும்.

(1)	(2)	(3)	(4)
42	42	42	42
42	7	7	7
42	———	———	———
42	14	28	294
42	28	14	———
42	———	———	
42	294	294	
———	———	———	
294			
———			

இந்நான்கு வகைகளையும் செய்து காட்டியபின் **கூட்டலின் சுருக்கமே பெருக்கல்** எனவும் கற்பிக்கவேண்டும்.

பரீக்ஷை :—ஒரு சைக்கிள் 62 ரூபாய்கள் வீதம் 7 சைக்கிள்களின் விலை யென்ன ?

A. IGNATIUS,
Higher Junior,
R. C. Bdg. & Training Institute.

செய்யுளிலக்கணம்

நான்காம் பாகம்

ஆசிரியப்பா

ஆசிரியப்பாவெனினும் அகவல் எனினும் ஒன்றே. இப்பாவிற்கு வேண்டிய சீர்கள் இயற்சீர்கள். தளைநோக்க வேண்டுவதில்லை. ஒவ்வோர் அடியிலும் நான்குசீர்கள் வரவேண்டும். வெண்பாவிற்கு வரும் மோனையைப்போல இதற்கும் மூன்ருஞ் சீர்க்கண் வரும் மோனை அழகாகும். வெண்பாவைப்போல இத்தனையடிகள்தான் வரவேண்டுமென்ற நியதியும் இப்பாவிற்கு இல்லை.

இவ்வகவல்பா நான்கு வகைப்படும். அவை, நேரிசை, நிலைமண்டிலம், அடிமறி மண்டிலம், இணைக்குறள் என்பனவாம். நேரிசையாசிரியத்திற்குப் பல அடிகள் வந்து, கடைசி அடிக்கு முந்திய அடியில் மூன்று சீர்கள் மாத்திரம் வரும். மற்ற அடிகளெல்லாம் நான்கு சீர்கள் வரும்: (வ-று)

நீர்மலிகடல் தவழ் நிலன் முதன் மற்றரும்
சீர்மலியுல கெல்லாம் செய்தளித் தழிப்ப
வல்லவனுய் முதன் மட்டீ றெப்பெதிர்
இல்லவனுய் உயர் இறையோன் ஒருவனை
பன்மை யொழியப் பணிந்தே
நன்மைசேர் அவனடி நண்ணுக மனமே.

நிலைமண்டில வாசிரியத்திற்கு எல்லா அடிகளிலும் சீர்கள் நான்கே. "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற தொடக்கத்தன இதுவே.

அடிமறி மண்டிலமும் இதுபோலவே வந்து எவ்வடியை எங்கு மாற்றி வைத்தாலும் பொருள் மாருத தன்மையுடையதாம். அதாவது ஒவ்வொரு அடியும் ஒரு பொருள் பயப்பதாம். (வ-று)

நீரிடை நுரையினேர் நெடுமிளைமையே
காரிடை மின்னலிற் கடிதிலும் புகழே
தேரிடை யுருளிற் செல்வ மாறுமே
தாரிடை மதுவினிற் றவிர்ந் தொழியின்பமே.

இணைக்குறள் ஆசிரியத்திற்கு இடையே பல அடிகளிற் சீர்கள் குறைந்து இரண்டு இணைந்துவரும். உதாரணம் நூல்வழிக் காண்க.

கட்டளைக் கலித்துறையும் இவண் எடுத்துக்காட்டத் தகுந்தது. இதற்கு நான்கடிகள் ஒத்துவரும். இவ்வடியில் வருந்தளை வெண்டளை. இதற்குச் சீர்தளை நோக்காது மெய்யெழுத்தை நீக்கி மற்ற எழுத்துக்களை எண்ணினால், நேர்ச் சீராகத் துவக்கிய அடிக்குப் பதினாறு எழுத்தும் நிரைச் சீராகத் துவக்கிய அடிக்குப் பதினேழு எழுத்தும் வரும். ஒவ்வொரு அடிக்கும் கடைச் சீர் விளங்காயாக வரவேண்டும். (வ-று)

“ மேவித் தயையன்பென் ஏர்பூட்டி வேதநூல் வித்துவிதைத்
தாவியை வாட்டும் அவாக்களை கட்டி அடைக்கலம் சூழ்
தாவிய வேலியாய் நல்வினை பூத்துமீன் தார்முடியாள்
காவ னலூரில் செய்பைங்கூழ் பேரின்பங் காய்த்திடுமே.”

“ அணங்காலங் தூயமு தாகு மணங்கே அனைத்துயிர்க்கும்
மணங்காலத் தேன்காலும் காவளை காவலூர் வந்தெழுந்தாள்
இணங்காத வெவ்வினை யாற்ற இத்தேவ இருட்பொழில்செய்
உணங்கா நிழல்வனத் தூழியே காய்வர் உளங்கெடவே.”

இங்கு மோனைவருஞ் சீர் கடைச் சீரென வறிக. மேலும் இப்பாக்களுக்கும் இனிச் சொல்லும் விருத்தங்களுக்கும் கடையெழுத்து, ஆ, ஏ, ஓ எனப் பெரும்பாலும் வருமென்றறிக.

எப்பிரல், மே மாதப் பூங்கொத்தின் வினாவுக்கு விடை.

படிகள் 1, 3, 9, 27, 81, 243 பலப்படிகள்.

G. Asirvatham.

‘ சுருளிமலை மீதுமேவும் சீலா ’ என்ற மெட்டு

1. பெத்லெகேம் தன்னுடைய பெருமை—பாரில்
புகட்ட வொண்ணேன் பூரியதன் மகிமை—துய்ய
தேவதூதர் கூடிவாழ்த்த தெய்வீகமாய் வந்துதித்த
எந்தா தேவ மைந்தா.

2. பெத்லெகேம் பிறந்தரிய பாதா—சின்ன
மாட்டுக் கொட்டிலிலுற்ற பாலா—மக்கள்
கூடிவாழ்த்த நாளுந்தனைத் தாழ்த்தி நடத்த—திரு
வாசா பெரு நேசா.

3. கன்னிமரி மைந்தமானு வேலா—இந்த
காசினி புரக்கவந்த சீலா—அன்று
கானாவூருக் கல்யாணத்தில் தேனுளிரசந்தந்த
கர்த்தா பரிசுத்தா.

4. நாசரேத்தூரில் வாழ்ந்த பெரியாய்—நீயே
நீச னென்னை நல்லனுக்க உரியாய்—பாழும்
பெண்ணு மண்ணும் பொன்னுமென்னை புதைக்குதையா
போதா நவநீதா.

5. நம்பினரை ஆதரிக்கும் நல்லன்—உண்டி
நாலாயிரம் பேர்க்களித்த வல்லன்—அரிய
அம்புவிதான் படைத்த உம்பர் குழாங்கள்போலும்
அத்தன் ஒரு நித்தன்.

6. கிறுமியென்னைக் காக்கவந்த தேவா—கவலை
காத்தருள்வீர் காருண்ய கோவே—கதறு
கலகமுள்ள உலகுதனில் காலந்தள்ள வேணுமையோ
போதா அருள் தாதா.

7. பாவப்பிணி தீர்க்கும் பரிகாரி—கெட்ட
பாதகர்க் காய்ச்சிந்திய நற்சோரி—உலக
மாயைதனையோட்டி யுந்தன் பாதம்வரச் செய்யவருள்
தாரீர் இங்கு வாரீர்.

V. T. Aloy Emmanuel.

ஓர் யோசனைக் கணக்கு

ஒரு இடைச்சி 500 சேர் பால் அரண்மனைக்குக் கொண்டு போனாள். போகும்வழியில், அவளுக்குத் தெரிந்த 3 சிநேகிதிகளைக் கண்டாள். முதலில் கண்ட சிநேகிதி, 80 சேர் பாலை அவளுக்குத் தெரியாமல் எடுத்துவிட்டு, தண்ணீரால் முன்போல் நிரப்பினாள். இரண்டாவது சிநேகிதி, 100 சேர் பாலை எடுத்துவிட்டு முதல் சிநேகிதியைப்போல் 100 சேர் தண்ணீரை ஊற்றி நிரப்பினாள். கடைசி சிநேகிதி, வீட்டிலுள்ள ஒரு விசேஷத்திற்காக, 120 சேர் பால் இடைச்சியிடமேயிருந்து பெற்றுக் கொண்டாள். இதை நிவர்த்திப்பதற்கு, 120 சேர் தண்ணீரைச் சேர்த்தாள். அப்படியானால் அரண்மனை போய்ச்சேர்ந்த சுத்தமான பால் எவ்வளவு?

A. S. Arulappan.

யோசனைக் கணக்கு விடை

(கொத்து 22, பெப்ருவரி 1932, மலர் 8-ல் பார்க்க)

சைன்யத்தின் தொகை 4,095. முதலில் அவர்கள் வாங்கிய மொத்தப் பழங்கள் 83,86,560.

விடுகதை விடை :—பாக்குவெட்டி.

D. Rayappan,
Higher Grade Junior.

182289
600 008

PERMISSU SUPERIORUM.
St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1932